**நானாட்டான் பிரதேச சபை**

---------------------------------

**மன்னார் மாவட்டம்**

-----------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

## 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 27 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. ஆண்டிற்கான கணக்காய்வளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 யூலை 18 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து நானாட்டான் பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுகள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 2015 ஆம் ஆண்டிற்கான 11 செலவினங்ளின் பெறுமதியாகிய ரூபா 138,451 தொகை மீளாய்வாண்டுச் செலவினமாக கணக்குகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

(ஆ) 2017 ஆம் ஆண்டிற்கான 02 செலவினங்களின் பெறுமதி ரூபா 77,783 தொகை மீளாய்வாண்டுச் செலவினமாக கணக்குகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

(இ) இனந்தெரியாத மீதிகள் மீளாய்வாண்டின் ஐந்தொகையில் நடைமுறை பொறுப்புக்களாக காட்டப்படுவதனால், திரண்டநிதி ரூபா 154,146 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

(ஈ) மீளாய்வாண்டின் வருமானச் செலவுக் கணக்கின் வருமான நிரலில் சேவைகளிற்கான கட்டணங்களுள் ரூபா 2,077,840 ஆன நீதிமன்றத் தண்டப்பணத்தை உள்ளடக்கியதன் காரணமாக சேவைகளிற்கான வருமானங்கள் ரூபா 2,077,840 ஆல் கூட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(உ) மீளாய்வாண்டில் 13 வாகனங்களிற்கான வரி அனுமதிப்பத்திரங்கள் பெறப்பட்டுள்ள போதிலும் அவற்றுள் 05 வாகனங்களிற்கு கடந்த வருடங்களிற்கான வரி அனுமதிப்பத்திரம் பெறப்படாமைக்கான தண்டப்பணமாக ரூபா 7,150 செலுத்தப்பட்டுள்ளது.

### 1.3.2 சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| | சட்டம், விதி, பிரமாணம் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபை (நிதியும் நிருவாகமும்) | |
| | i) விதி இலக்கம் 5(xii) | காசு களஞ்சியப் பொருள் முதலியவற்றுடன் தொடர்பு கொண்டுள்ள உத்தியோகத்தரிடமிருந்து பிணைப் பணங்களைப் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | ii) விதி இலக்கம் 59 | ஒவ்வோராண்டு தொடக்கத்திலும் வருமான பரிசோதகர், வருமான மேற்பார்வையாளர் அல்லது தலைவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் வேறு உத்தியோகத்தர் சபைப் பிரதேசத்தில் கணிப்பீடொன்றை மேற்கொண்டு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 150(1) ஆம் பிரிவிற்கு அமைவாக வியாபாரங்கள் பற்றிய நிரல் ஒன்றைத் தயாரிக்கப்பட்டிருக்காமையால் வியாபார வரிகள் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | iii) விதி இலக்கம் 178(3) | பொருட்களை வழங்குவதற்காக நிறுவனங்களின் நிரல் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | iv) விதி இலக்கம் 218 | காணிகள் கட்டடங்கள் யாவும் ஒவ்வொரு வருடமும் ஆகக் குறைந்தது ஒரு முறையாவது தவிசாளரினால் மேற்பார்வை செய்யப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | இலங்கை சோசலிசகுடியரசின் நிதி ஒழுங்குவிதி | |
| | (i) நிதி ஒழுங்குவிதி 371 | 2001 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரை பல்வேறு செயற்பாடுகளுக்காக பிரதேச சபையின் உத்தியோகத்தர்களுக்கும் வெளித்தரப்பினர்களுக்கும் செலுத்தப்பட்ட முற்பணம் ரூபா 1,822,105 தொகையினை அறவீடு செய்வதற்கு சபையினால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதி ஒழுங்குவிதி 571 | காலங் கடந்த ரூபா 647,033 பெறுமதியான 33 மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | | ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என்பவற்றிற்கு -<br>- செலுத்த வேண்டிய 2011 ஆண்டு முதல் 2012 ஆண்டு வரையான காலப்பகுதிக்கான 12 கொடுப்பனவுகளின் கூட்டுமொத்தத் தொகை ரூபா 123,385 ஆனது கணக்காய்வுத் திகதியான 23 மே 2016 அன்று வரை செலுத்தப்படாது பிரதேச சபையின் வைப்புக் கணக்குகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. |

- ஓய்வூதியத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய 02 கொடுப்பனவுகளின் கூட்டுமொத்தத் தொகை ரூபா 50,358 தொகை கணக்காய்வுத் திகதியான 23 மே 2016 அன்று வரை செலுத்தப்படாது வைப்புக் கணக்குகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2016 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,119,549 தொகை ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,335,045 தொகை காணப்பட்டது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் என்பவற்றிற்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

| வருமான மூலம் | பாதீடு (ரூபா) | உண்மை (ரூபா) | நிலுவை (ரூபா) | வீதம் |
|---|---|---|---|---|
| வீதவரிகளும் வரிகளும் | 460,000 | 366,462 | 93,538 | 20 |
| வாடகைகள் | 6,095,995 | 7,833,168 | (1,737,173) | (28) |
| உரிமங்கள் | 620,000 | 724,964 | (104,964) | (17) |
| சேவைகளுக்கான கட்டணங்கள் | 2,919,000 | 4,739,921 | (1,820,921) | (62) |
| பற்றாணைச் செலவுகள் | 132,000 | 60,482 | 71,518 | 54 |
| | **10,226,995** | **13,724,997** | **(3,498,002)** | |

#### 2.2.2 வாடகைகள்

(அ) சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் உள்ள 03 உப அலுவலகங்களின் 04 வருமான விடயங்களின் நிலுவைகளின் கூட்டுமொத்தத் தொகையான ரூபா 787,100 தொகையினை அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் 06 தொலைத் தொடர்பு கோபுரங்கள் காணப்பட்ட போதிலும், அவற்றில் 02 தொலைத் தொடர்பு நிறுவனங்களின் கோபுரங்களிற்கு அனுமதிக்கப்பட்ட வரி ரூபா 50,000 சபையினால் இதுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் உள்ள தொலைத் தொடர்பு நிறுவனங்களிற்கு மீளாய்வாண்டிற்கான வாடகைகள் சேகரிக்கப்பட்ட போதிலும், குறித்த கோபுரங்கள் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான நிலுவை வாடகை அறவீடுகள் செய்வதற்கு சபையினால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 முத்திரை தீர்வைக்கட்டணம்

உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து 2011 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை பெறப்பட்ட வேண்டிய ரூபா 8,460,871 தொகையான முத்திரைத் தீர்வைக் கட்டண நிலுவைத் தொகையானது மீளாய்வாண்டின் கணக்குகளில் பெறவேண்டிய தொகை என காட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ பலவீனம்

(அ) பிரதேச சபையின் கீழ் உள்ள முருங்கன் சந்தைக் கடைத்தொகுதியில் 12 ஆம் இலக்கக் கடையில் கடை வாடகை ஒப்பந்தத்திற்கு முரணாக கடை உரிமையாளரால் காற்றுச் சீராக்கி பொருத்தப்பட்ட போதிலும் கணக்காய்வுத் திகதி வரை வருமான பரிசோதகர்கள் அதனைப் பரிசிலித்து அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபையின் கீழ் உள்ள முருங்கன் சந்தைக்கடைத் தொகுதியில் உள்ள 32 கடைகளில் 20 கடைகளின் உரிமையாளர்களால் கடை வாடகை ஒப்பந்தத்திற்கு முரணாக மின்சாரப் பட்டியல் செலுத்தப்படாமையினால் 12 கடைகளின் மின்மானியானது இலங்கை மின்சார சபையினால் கழற்றப்பட்டும் 08 கடைகளிற்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டும் காணப்பட்ட போதிலும் வருமான பரிசோதகர், முருங்கன் உப அலுவலகப் பொறுப்பதிகாரி மற்றும் நானாட்டான் பிரதேசசபை செயலாளரால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதேச சபை நிர்வாகத்தின் கீழ் 34 அட்டவணைப்படுத்தப்பட்ட அலுவலர்களில் 05 அலுவலர்கள் 12 - 22 வருடங்கள் தொடர்சியாக பணி புரிகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

### 3.2 திண்மக்கழிவு முகாமைத்துவம்

சபையின் எல்லைப்பரப்பிலிருந்து அகற்றப்படுகின்ற குப்பை கூளங்களை எரித்தல் மற்றும் புதைத்தல் செயற்பாடுகள் மட்டுமே சபையால் மேற்கொள்ளப்பட்டிருந்தனவேயன்றி கொம்பொஸ்ட் மற்றும் மீள்சுழற்சி செயற்திட்டங்களைக் கொண்ட திண்மக்கழிவு முகாமைத்துவத்தைச் செயற்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-----------------------------------------------

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---------------------------

மீளாய்வாண்டின் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் பற்றாணைச் செலவுகள் வருமானமாக 132,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 46 வீதமான வருமானங்கள் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயற்றிறனின்மை

----------------------

சபையின் மீளாய்வாண்டு மதிப்பீட்டில் 03 செலவினங்களிற்காக ரூபா 1,213,805 மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும் ரூபா 665,897 தொகை மாத்திரமே செலவு செய்யப்பட்டமையால் மதிப்பீட்டின் இலக்கை அடைய சபை தவறியுள்ளது.

### 4.3 சொத்து முகாமைத்துவம்

------------------------------

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் அடிப்படையில் ஓட்ட நிலையில் காணப்படும் வாகனங்களிற்கு வாகன விடயத்திற்குப் பொறுப்பான அலுவலர் மற்றும் சாரதியின் கவனயீனத்தின் காரணமாக 2016 ஆம் ஆண்டிற்கான வருமான அனுமதிப்பத்திரத்திற்காக ரூபா 6,305 தண்டம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) வாகன ஓட்டப்பதிவேடுகளையும் களஞ்சிய சாலையின் பதிவுப் புத்தகங்களையும் ஒப்பீடு செய்த போது 04 வாகனங்களின் ரூபா 34,200 பெறுமதியான 360 லீற்றர் டீசல் நுகர்வானது களஞ்சியப் பதிவேடுகளில் காணப்பட்ட போதிலும் வாகன ஓட்டப்பதிவேடுகளில் பதியப்படாமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) வருமானச் சேகரிப்பு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) பெறவேண்டிய கணக்குகள்
(ஈ) முற்பணக் கணக்கு
(உ) கணக்கீடு